மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 142/2019**

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ஆம் தேதி புதன்கிழமை

பி.வா.சா.1 (ரத்தினக்குமார்)

கு.வி தொடர்ச்சி (வாதி தரப்பில்)

எனது வழக்குபடி தாவா 9வது இலக்க சொத்தில் 3ல் 1 பாகம் கன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கன்னுச்சாமி கோனாருக்கு சுப்பையா கோனார் மகன் வெள்ளைச்சாமி கோனார் வாரிசு அல்ல என்றால் சரிதான். கன்னுச்சாமி கோனாருக்கு வெள்ளைச்சாமி கோனாரின் மகன்களான சுப்பையா கோனார் மற்றும் தங்கசாமி கோனார் ஆகியோர்கள் வாரிசல்ல என்றால் சரிதான். எனது தாயார் பொன்னம்மாளின் திருமணத்தின் போது தாவா 9வது இலக்க சொத்தில் தனக்கு பாத்தியமாக இருந்த 3ல் 1 பாகத்தை கன்னுச்சாமி கோனார் பொன்னமாளுக்கு சீதனமாக கொடுத்தார் என்று வழக்கு நடத்துகிறேன் என்றால் சரிதான். தாவா 9வது இலக்க சொத்து சர்வே எண். 98/2 எந்த தேதியில் எனது தாயார் பொன்னம்மாள் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் 17.11.1994 ஆகும். நான் கூறிய 1994க்கு முன்னரே தாவா 9வது இலக்க சொத்து நிலஉடைமை மேம்பாட்டு திட்டக்காலத்தில் எனது தாத்தாவான சுப்பையா கோனார் மகன் வெள்ளைச்சாமி கோனார் பெயரில் யு.டி.ஆர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயாருக்கு 3ல் 1 பாகம் 1994ம் ஆண்டு பட்டா ஏற்பட்ட நிலையில் அவரின் தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியமான தாவா 9வது இலக்க சொத்து முழுமையும் அதற்கு முன்னதாகவே எனது தாத்தா வெள்ளைச்சாமி பெயருக்கு எப்படி பட்டா ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை, ஆனால் அதற்கான ஆதாரம் உள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணம் மோசடி எண்ணத்துடன் எனது தகப்பனாரின் அதிகார வரம்பின் அடிப்படையில் வருவாய் துறையால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சாஆ.4 ஆவணமான பட்டா மாறுதல் நடவடிக்கையில் தாவா 9வது இலக்க சொத்து எனது தாத்தாவான சுப்பையா கோனார் மகன் வெள்ளைசாமி கோனார் என்ற பெயரிலிருந்து எனது தகப்பனாரான மருதானந்தம் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 9வது இலக்கத்தின் முழுசொத்தும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் எனது தகப்பனார் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வெள்ளைச்சாமி கோனாரின் வாரிசுகளான எனது தாத்தா சுப்பையா கோனார் மற்றும்

அவரது சகோதரர் தங்கசாமி கோனார் ஆகியோர்கள் பெயரில் பட்டா மாறுதல் ஏற்படாமல் எனது தகப்பனார் பெயரில் மட்டும் பட்டா மாறுதல் ஏற்பட்டதற்கு தனிப்பட்ட காரணம் என்ன என்றால் அதனுடைய முழுவிபரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எந்த அண்டு இறந்தார் என்றால் 26.08.1994 ல் இறந்தார். எனது தகப்பனார் இறப்பதற்கு முன்னதாக தாவா சொத்துக்கள் சம்பந்தமாக 1ம் பிரதிவாதியான எனது தாயார் பெயரில் மட்டும் எதாவது செட்டில்மெண்ட், உயில், கிரையம்,குடும்ப ஆவண ஏற்பாடு போன்ற பத்திரங்கள் பதிவுசெய்து வைத்திருந்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, எனது தம்பியான 5ம் பிரதிவாதியின் கணவர் ராஜசேகருக்கு எழுதி வைத்திருக்கலாம். எனது தகப்பனாருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 2 ஆண், 2 பெண் பிள்ளைகள் ஆவார்கள். எனது தகப்பனார் இறந்த பிறகு எனது தாயார் சேர்த்து 5 வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி 5 பேர்கள் வாரிசாக இருக்கும் போது பி.வா.சா.ஆ,6ல் கண்டுள்ள எனது தாயார் பெயரில் மட்டும் பட்டா ஏற்பட்டுள்ளது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. எனது வழக்கின்படி எடுத்துக்கொண்டாலும் தாவா 9வது இலக்க சொத்து மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து எனது தாயார் பொன்னம்மாள் மற்றும் எனது தகப்பனார் மருதானந்தம் ஆகியோர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்று நான் வாதாடி வரும் நிலையில், மேற்கண்ட சொத்துக்களை பொறுத்து எனதுகுடும்ப உறுப்பினர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டிருக்க வேண்டுமே தவிர எனது தாயார் தாவா 9வது இலக்க சொத்துகளை பொறுத்து எழுதி வைத்துள்ள இனாம்செட்டில்மெண்ட் பத்திரமும் இதர சொத்துக்களை பொறுத்து எனக்கு எழுதிகொடுத்துள்ள உயில் பத்திரமும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தாயார் 5ம் பிரதிவாதியின் கணவருக்கு எழுதிகொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 5ம் பிரதிவாதியின் கணவரான ராஜசேகர் என்பவர் 8, 9 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரைய பத்திரம் செல்லதக்கதல்ல என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா 9வது இலக்க சொத்தில் தண்ணீர் பந்தல் உள்ளதா என்றால் ஆதியில் இருந்தது, தற்போது இல்லை. அதற்கான கட்டிடம் இடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த காலத்தில் இடிக்கப்பட்டது என்றால் எனது தாத்தா சுப்பையா கோனார் வாத நோய் ஏற்பட்டு படுக்கையில் இருந்த போது இடிக்கப்பட்டது. எனது தாத்தா வாதநோயில் இருந்த போது எனது தந்தை தான் இடித்தார் என்றால் சரியல்ல, எனது தாத்தா இருக்கும் போது மேற்படி தண்ணீர் பந்தலை ஒரு சாமியார் தான் பராமரித்து வந்தார். சாமியாருக்கு எனது தாத்தா சுப்பையா கோனார் தான் செலவுக்கு பணம் கொடுத்து வந்தார். தாவா 9வது இலக்க சொத்து வருமானத்தைக் கொண்டு மேற்படி பணம் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ,13 உயில் பத்திரம் 03.08.2016ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலை தயாரித்தவர் மானாமதுரை மேல்கரையில் உள்ள

தனபால் என்றால் சரிதான். உயில் தயாரித்ததாக சொல்லும் தனபால் பத்திரம் எழுதப்படும் அலுவலத்திலிருந்து மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகம் சுமார் 100 அல்லது 150மீ அளவு இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அளவுகள் தெரிந்து கொண்டே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயிலில் சான்று கையொப்பம் செய்துள்ள நோட்டரி வழக்கறிஞர் சுந்தர் என்பவர் 04.08.2016ல் கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். நோட்டரி வழக்கறிஞர் சுந்தர் சிவகங்கையில் உள்ளார் என்றால் சரிதான். அவரது அலுவலகத்தில் வைத்து தான் கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். உண்மையிலே தன் சுயநினைவோடு எனது தாயார் பொன்னம்மாள் 1 முதல் 5, 10 இலக்க சொத்தை உயில் எழுதி வைக்க வேண்டும் என்று நினைத்திருந்தால், உயிலில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தனபால் பத்திரம் எழுதும் அலவகத்திற்கு அருகில் உள்ள மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி உயிலை பதிவுசெய்து வைத்திருப்பார் என்றால் சரியல்ல. மோசடியாக எனது தாயார் பொன்னம்மாளின் சுயநினைவற்ற நிலையில் ஏதோ ஒரு வகையில் மோசடியாக உயில் தயாரிக்கப்பட்டது என்றும், நான் சொல்லியுள்ளது போல எனது தாயாரின் சுயவிருப்பபடி பி.வா.சா.ஆ,13 தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் உயில் எழுத வேண்டும் என்று எனது தாயார் நினைத்திருந்தால் அருகில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தை விட்டுவிட்டு சுமார் 20கி.மீ தொலைவில் உள்ள சிவகங்கையில் நோட்டரி வழக்கறிஞர் சுந்தர் என்பவர் முன்னிலையில் கையெழுத்து செய்திட அவசியமில்லை என்றும், கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது தாயாரைப் பெற்ற தாத்தா கன்னுச்சாமி என்பவருக்கு பாத்தியமான சொத்து என்றும், அதில் தாத்தா கன்னுச்சாமி வழியில் சரிபாக பாத்தியமுள்ள வாதிக்கும் பாத்தியமான சொத்துக்களை பொறுத்து எனக்கு பி.வா.சா.ஆ,13ல் எழுதி வைக்க எனது தாயாருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. உயிலில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் பொன்னம்மாள், அம்மானியம்மாளின் தகப்பனாரான கன்னுச்சாமியின் சொத்து என்றால் சரிதான். வாதிக்கு சட்டப்படி அவரது தாயார் அம்மனியம்மாள் பெயரில் கிடைக்கக் கூடிய 2ல் 1 பாக சொத்தினை அபகரிக்கும் நோக்குடன் எனது தாயார், தகப்பனார், தாத்தா, அவரது சகோதரர் தங்கசாமி கோனார் மற்றும் எனது தாத்தாவை பெற்ற வெள்ளைசாமி கோனார் ஆகியோர்கள் ஆரம்ப காலமுதல் செயல்பட்டு வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பக்கம் 7 பத்தி 2ல் தாவா 1 முதல் 8 இலக்க சொத்துகளை 1ம் பிரதிவாதியே தன் பெயரில் பட்டா மாற்றி கொண்டு வரி செலததி தன் கணவரோடும் குழந்தைகளோடும் அனுபவித்து வந்து இன்றுவரை தாவா சொத்து 1 முதுல் 7 பிரதிவாதிகள் பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா

1 முதல் 8 இலக்க சொத்து கன்னுச்சாமி பெயரில் பட்டா இருந்தது என்றால் 1961க்கு முன்பாக கன்னுசாமி பெயரில் பட்டா இருந்தது. தாவா 1 முதல் 8 இலக்க சொத்து கன்னுச்சாமி பெயரிலிருந்து எனது தாயார் மற்றும் தகப்பனார் மருதானந்தம் பெயருக்கு மாற்றப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்னர் தான் வழக்கு சம்பந்தமான என் பெயரில் உள்ள வரி ரசீதுகள், மின் இணைப்பு ரசீதுகள் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தாவா 10வது இலக்கச் சொத்தை பொறுத்து சிட்டம்மாள் என்பவர் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் சாசனமானது மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து அவரது தாயார் அம்மனியம்மாளின் தகப்பனாரான கன்னுச்சாமி வழிசொத்து என்ற நிலையில் பிரதிவாதிகளாகிய நான் வாதிக்குரிய 2ல் 1 பாகத்தை கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியமான சரிசம பாகமுள்ள தாவா சொத்துக்களை பொறுத்து எனது தாயாரால் எழுதப்பட்டுள்ள இனாம் செட்டில்மெண்ட் பத்திரம், உயில் பத்திரம், 5ம் பிரதிவாதி கணவர் ராஜசேகருக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை